| ப.எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# தமிழ் – இரண்டாம் தாள்

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

காலம் : $2^1/_2$ மணி] [மதிப்பெண்கள்: 100

**அறிவுரை** : அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

இவ்வினாத்தாள் **நான்கு பிரிவுகளை** கொண்டது

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.

## பிரிவு – I

**(மதிப்பெண்கள் : 20)**

### பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**உரிய விடையை தேர்ந்தெழுதுக** 5 × 1 = 5

(1) வினைத்தொகை பயின்று வந்துள்ள சொற்றொடரைத் தேர்ந்தெழுதுக.
(அ) செய்தொழில் (ஆ) மாறா இளமை
(இ) பூரிகிழங்கு (ஈ) தேரும் திருவிழாவும்

(2) கீழ்வருவனவற்றுள் உம்மைத்தொகையைத் தேர்ந்தெழுதுக.
(அ) தெருக்கடை (ஆ) வெற்றிலைபாக்கு (இ) விளக்கெண்ணெய் (ஈ) தாயும்சேயும்

(3) ஒருபொருட் பன்மொழியைத் தேர்ந்தெழுதுக.
(அ) விருப்பும் வெறுப்புமின்றி வாழ்ந்தான் (ஆ) இரவுபகல் பாராது உழைத்தான்
(இ) உயர்ந்தோங்கிய மலையைக் கண்டேன் (ஈ) கயிறு திரிக்கிறான்

(4) 'வௌவால்' – இச்சொல்லில் பயின்றுவரும் குறுக்கம் யாது?
(அ) ஐகாரக்குறுக்கம் (ஆ) ஔகாரக்குறுக்கம்
(இ) மகரக்குறுக்கம் (ஈ) ஆய்தக்குறுக்கம்

(5) இறந்தகால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெழுதுக.
(அ) வருகிறான் (ஆ) வருவான் (இ) வருகின்றான் (ஈ) வந்தான்

### பகுதி - 2

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க.** 5 × 1 = 5

(6) மரவேர் என்பது ________ விகாரம் ஆகும்.

(7) 'வேய்புரை தோள்' – இச்சொல்லில் அமைந்துள்ள உவமை உருபு ________ .

[திருப்புக

(8) நண்பகல் என்பது ________ திணைக்குரிய சிறுபொழுது.

(9) 'ஆடுவாயா' என்னும் வினாவுக்குப் 'பாடுவேன்' எனக் கூறுவது ________ விடை.

(10) மொழியமிழ்து – இவ்வுருவகத்திற்கான உவமை _______ .

**பகுதி - 3**

**சுருக்கமாக விடையளிக்க** **10 × 1 = 10**

(11) வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றனுக்குச் சான்று தருக.

(12) பெறு – இச்சொல்லை வினையெச்சமாக்குக.

(13) இளமையில் கல் – இத்தொடரைச் செய்தித் தொடராக மாற்றுக.

(14) கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழைநீக்கி எழுதுக.

படித்து முடித்தவருக்கு அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபரியும் வாய்ப்புகள் உள்ளது.

(15) கீழ்க்காணும் தொடரில் சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.

உரிமைக்குரல் கொடுத்த நல்லோர்களைதான் நாம் சீர்திருத்தச் செம்மல்கள் என சிந்தை மகிழப் பாராட்டுகிறோம்.

(16) பொய்யா விளக்கு – இலக்கணக் குறிப்புத் தருக.

(17) கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.

வலதுபக்க சுவற்றில் எழுதாதே

(18) கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

மண் என்றால் நிலம் என்பது பொருள் தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐவகையாகப் பிரித்தார்கள்.

(19) கீழ்க்காணும் மரபுத்தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.

பாரதிதாசன் தமிழிலக்கிய வானில் கொடிகட்டிப் பறந்தார்.

(20) நானிலம் – இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.

**பிரிவு – II**

**(மதிப்பெண்கள் : 10)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு விடையளிக்க.** **5 × 2 = 10**

(21) பெற்றேன் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(22) அடுக்குத்தொடரும் இரட்டைக்கிளவியும் எவ்வாறெல்லாம் வேறுபடுகின்றன?

(23) மருதத்திணைக்குரிய கருப்பொருள்கள் ஆறனை எழுதுக.

(24) எயில் காத்தல் எவ்வகைத்திணை? அதற்கு எதிரான திணையை விளக்குக.

(25) ஆய்தக்குறுக்கத்திற்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

(26) விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

(27) செம்மொழி - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

## பிரிவு – III
## (மதிப்பெண்கள் : 50)

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டனுக்கு விடையளிக்க.** **2 × 5 = 10**

(28) கீழே உள்ள பாடலில் பயின்றுவரும் பாவகையைக் குறிப்பிட்டு, அதன் இலக்கணம் எழுதுக.

தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே.

(29) வஞ்சப்புகழ்ச்சி அணி அல்லது உவமை அணியைச் சான்றுதந்து விளக்குக.

(30) கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

### பகுதி - 2

**எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றுக்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.** **2 × 5 = 10**

(31) பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தும் அவர்தம் செயல்கள் ஐந்தனைக் குறிப்பிடுக.

(32) பொங்கற் புதுநாளின் மாண்பினைப் பற்றி, அறிஞர் அண்ணா கூறுவனவற்றை எழுதுக.

(33) ‟என்னடியம்மா, இந்தக் குட்டியெல்லாம் இப்படிக் கத்துதே. கவனிக்கக் கூடாதா, பாவம். என்றாள் கிழவி, ‟அந்த நாய் காலையிலே போனது, இன்னும் வரவில்லை அத்தை, பால் இல்லாமல் குட்டி எல்லாம் கத்துது”என்றாள் மருமகள். - குறட்டை ஒலி என்னும் இக்கதையில் இடம்பெறும் மருமகளின் கருணை உள்ளத்தை எடுத்துக்காட்டுக.

### பகுதி - 3

(34) **(அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.** **3 + 2 = 5**

‘பஸ் ஏன் இவ்வளவு ரஷ்ஷாக இருக்கிறது? நிற்கக்கூட முடியவில்லை. உட்காருவதற்கு ஒரு சீட் கிடைத்தால் நன்றாக இருக்கும். லேட்டாகப் போனால், ஆபீஸ்ல மேனேஜர் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது.’

**(ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக.**

75, 39, 148, 260.

(35) ***(அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியைத் தமிழாக்கம் செய்க.*** **3 + 2 = 5**

Educational Institutions are the true seats of learning. The students, who are really anxious to learn, can develop healthy habits only in the schools. In a school we are taught how to move in society, how to behave with others and how to progress in life.

***(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.***

(i) Health is wealth

(ii) Make hay while the sun shines

(iii) Self-help is the best help

(iv) Work is worship

## *பகுதி* - 4

***கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.*** **5**

(36) *(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.*

*கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தத்தம் கூடுகளை விட்டுப் பறக்கத் தொடங்கின. அந்த விடியற்காலை நேரத்தில் திடீரென்று வானில் ஓர் ஒளி தோன்றியது. அப்போது* ________________________________________ .

*(அல்லது)*

*(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.*

*மழை அல்லது கடல்*

## *பகுதி* - 5

(37) ***கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏதேனும் ஐந்து நயங்களை எடுத்தெழுதுக.*** **5**

*சோற்றைஅள் ளுங்கால் துவள்வாழைத் தண்டிலுறும்*
*சாற்றைப்போ லேவடியத் தக்கவண்ணம் – ஊற்றுநெய்யை*
*வாழை இலையின் அடிஉண்பார் வலப்புறத்தில்*
*வீழ விரித்துக் கறிவகைகள் – சூழவைத்துத்*
*தண்ணீர்வெந் நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு*
*வெண்சோ றிடுமுன் மிகஇனிக்கும் – பண்ணியமும்*
*முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே*
*ஒக்கநின்றே உண்டபின் சோறிட்டுத் தக்கபடி*
*கேட்கும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிஞ்சுமன்பால்*
*ஊட்டுதல்வேண் டும்தாய்போல் ஒண்டொடியே!* - பாரதிதாசன்

**பகுதி - 6**

(38) ***கீழுள்ள படிவத்தை நிரப்புக.*** **5**

வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம்

................................ கிளை நாள்..................

இடம்................................

சேமிப்புக் கணக்கெண்..........................................

பெயர்.....................................

ரூபாய்........................................ ரூ.

| காசோலை எண்/நாள் | பெறப்பட்ட வங்கி/கிளை | தொகை ரூ, |
|---|---|---|
| | | |

காசோலை விவரம்:

தொகை

காசாளர் எழுத்தர் / மேற்பார்வையாளர்

.......................................................... கிளை நாள்..................................

இடம்.................................................................

சேமிப்புக் கணக்கெண்.................................................................

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |

நிலையான கணக்கெண் (PAN)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

பெயர்...................................................................................................... ரூ.

ரூபாய்......................................................................................................

காசோலை விவரம்: பண விவரம் :

| காசோலை எண்/நாள் | பெறப்பட்ட வங்கி/கிளை | தொகை ரூ, |
|---|---|---|
| | | |
| | | |

செலுத்துநர் கையொப்பம்

| நாள் | தொகை |
|---|---|
| 1000 × | |
| 500 × | |
| 100 × | |
| 50 × | |
| 20 × | |
| 10 × | |
| 5 × | |
| காசுகள் | |
| மொத்தம் | |

**பகுதி - 7**

(39) ***(அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க*** **3 + 2 = 5**

*மாறன். வளவனின் நெருங்கிய நண்பன். சில நாளாக உடல்நலமில்லாமல் இருந்த மாறன் நேற்று எதிர்பாராதவிதமாக மாடிப்படியிலிருந்து கீழே விழுந்ததில் முற்றிலுமாகத் தன் நினைவை இழந்துவிட்டான். மாறனின் நிலைகண்டு வளவன் மிகவும் வருத்தமடைந்தான். உணவு உண்பதற்குக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய மனவருத்தம் பெற்றோருக்குத் தெரிந்திருந்தது. அவர்கள் எவ்வளவுதான் ஆறுதல் மொழிகள் கூறினாலும் அவனால் நண்பனுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை.*

(i) *வளவன், ஏன் மனவருத்தத்தோடு இருந்தான்?*

(ii) *நமக்குத் தாங்க இயலாத துன்பம் ஏற்படும்போது அதிலிருந்து மீள வழி யாது?*

(iii) *இச்சூழலில் பயன்படுத்தவேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?*

**(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து வினாக்களுக்கு நும் கருத்தை எழுதுக.**

*விழிமாற்றுத் திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் கடந்து செல்கின்றனர். ஆனால், அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.*

(i) *இதுபோன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?*

(ii) *பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?*

## *பிரிவு* – IV

**(*மதிப்பெண்கள் :* 20)**

### *பகுதி* - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** **10**

(40) *(அ) நும் ஊருக்குக் குடிநீர் வசதி செய்து தருமாறு மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் வரைக.*

*(அல்லது)*

*(ஆ) தட்டச்சர் பணிக்கு விண்ணப்பிக்க, தன் விவரப்பட்டியல் உருவாக்குக.*

### *பகுதி* - 2

**கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக.** **10**

(41) *(அ) கனிணி - தோற்றம் – வளர்ச்சி - இணையம் – இணையத்தள வசதி - கனிணி வழிக் கல்வி - கனிணியின் வியத்தகு செயல்கள் – பயன்படும் துறைகள் – உலகம் உள்ளங்கையில்.*

*(அல்லது)*

*(ஆ) சுற்றுப்புறச் சூழல் – மாசுக்கட்டுப்பாடு – இயற்கையை அழித்தல் – காற்று மாசு – நச்சுப்புகை - நீர்மாசு – தொழிற்சாலைகளின் கழிவு – மாசடைந்த நீர் – ஒலிமாசு – ஒலிபெருக்கி - இரைச்சல் – நரம்புமண்டலப் பாதிப்பு - கட்டுப்படுத்தும் வழிகள்.*